**செ.வெ.எண்.100/2018** **நாள்.07/03/2018**

# 11ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வு நடைபெறும் தேர்வு மையத்தை மாவட்ட வருவாய் அலுவலர் திரு.அ.நூர்முகம்மது அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

காஞ்சிபுரம் மாவட்டம், வாலாஜாபாத் மாசிலாமணி முதலியார் மேல்நிலைப் பள்ளி மற்றும் படப்பை அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் 11ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வு நடைபெறும் தேர்வு மையத்தை மாவட்ட வருவாய் அலுவலர் திரு.அ.நூர்முகம்மது அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் திருபெரும்புதூர் வட்டாட்சியர் திரு.ரமேஷ் உடனிருந்தார். பின்பு செய்தியாளர்களிடம் பேசியதாவது,

தமிழகத்தில் முதல் முறையாக 11ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வு என தமிழக அரசால் அறிவிக்கப்பட்டு 07.03.2018 அன்று துவங்கி 16.04.2018 வரை நடைபெறுகிறது. தேர்வு காலை 10.00 மணிக்கு தொடங்கி நண்பகல் 12.45 மணி வரை நடைபெறுகிறது. 11–ஆம் வகுப்பு பொதுத் தேர்வு காஞ்சிபுரம் மாவட்டத்தில் 119 மையங்களில் நடைபெறுகிறது. இதில், 17 மையங்களில் தேர்வு எழுதும் மாணவர்களின் அதிக எண்ணிக்கையை கருத்தில் கொண்டு, A- Wing மற்றும் B- Wing என்று இரு பிரிவுகளாக தேர்வு மையங்கள் செயல்படும். ஒவ்வொரு மையத்திற்கும் ஒரு முதன்மைக் கண்காணிப்பாளர் மற்றும் ஒரு துறை அலுவலர் வீதம் 136 முதன்மைக் கண்காணிப்பாளரும் 136 துறை அலுவலர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். 11– ஆம் வகுப்பு பொதுத் தேர்வை 21 ஆயிரத்து 790 மாணவர்களும், 25 ஆயிரத்து 337 மாணவிகளும், 173 தனித்தேர்வர்களும் ஆக மொத்தம் 47 ஆயிரத்து 300 பேர் தேர்வு எழுதுகின்றனர். தேர்வு மையங்களுக்கு வினாத்தாள் வழங்குவதற்காக 19 வினாத்தாள் கட்டுக்காப்பு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளது.

11 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு தேர்வு எழுத போதுமான விடைத்தாள்கள் பெற்று முகப்பு தாள்கள் தைக்கப்பட்டு அந்தந்த மையத்தில் பாதுகாப்பாக தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ளது. தேர்வு நாட்களில் தேர்வு மையங்களுக்கு வினாத்தாட்களை பாதுகாப்பான முறையில் எடுத்துச் செல்ல ஆயுதம் தாங்கிய காவலர்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மாற்றுதிறனாளி மாணவர்கள் (Scribe) 65 தேர்வு மையப் பள்ளிகளில் 140 மாணவர்கள் தேர்வு எழுதுகின்றனர். மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு சொல்வதை எழுதுபவர்கள் 75 ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர் என தெரிவித்தார்.